பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 09 வெள்ளிக்கிழமை 24.07.2020 கதிர் 128

## மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று கடலில் தவறி வீழ்ந்த மீனவரின் சடலம் காங்கேசன் துறைக் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

2

# விக்கியை இன்று துருவியது சி.ஐ.டி.!

### யாழ். இல்லத்தில் இன்று இரண்டு மணிநேரம் கேள்வி – பதில் அறிக்கை குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை 24

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட அதிகாரிகள் குழுவொன்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் இரண்டு மணி நேரம் கடும் விசாரணை நடத்தியுள்ளது. கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளின் உத்தரவையடுத்தே இந்த விசாரணை இடம்பெற்றது எனத் தெரியவந்துள்ளது.

2

## யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்முறை வெடிக்கலாம்!

### எச்சரிக்கின்றது கபே அமைப்பு

வவுனியா, ஜூலை 24

தேர்தலில் வன்முறைகள் இடம்பெறக்கூடிய மாவட்டங்களில் வடக்கில் யாழ். மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக 'சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு' (கபே) தெரிவித்துள்ளது.

கபே ஏற்பாட்டில் வவுனியா விருந்தினர் விடுதியில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைப்பின் பணிப்பாளர் அகமட் மனாப் இவ்வாறு தெரிவித்தார்.

2

## வாக்குச் சாவடிகளில் கொரோனா பரவாது

### மஹிந்த தேசப்பிரிய உத்தரவாதம்

கொழும்பு, ஜூலை 24

கொரோனா வைரஸ் எந்த வகையிலும் வாக்குச் சாவடிகள் வழியாக பரவாது என்று மக்களுக்கு உறுதியளிக்க முடியும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண மற்றும் பிரதேச சுகாதார சேவை

2

## பயிர்ச்செய்கையில் ஈடுபட ராணுவம் அனுமதி மறுப்பு

வவுனியா, ஜூலை 24

வவுனியா வடக்கின் எல்லையோர கிராமமான தனிக்கல்லு பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதி மறுப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கின் எல்லையோர கிராமமாக தனிக்கல்லு கிராமம் காணப்படுகின்றது. இந்தப் பகுதியில் 250 ஏக்கர் காணிகள் பட்டிக் குடியிருப்பு மற்றும்

2

## பிரதமர் மஹிந்தவை எதிர்த்து கொழும்பில் இன்று போராட்டம்

கொழும்பு, ஜூலை 24

பெண்களை வேதனைப்படுத்தும் வகையில் தேர்தல் மேடையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார் எனக்கூறி அவருக்கு எதிராகக் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலான பெண்கள் அமைப்புகள் பங்கேற்று, பிரதமர் மஹிந்தவின் கருத்துக்கு

2

## போராட்டங்களே வாழ்வாகிவிட்டது

### ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 24

'போராட்ட காலத்திலேதான் எனது அரசியல் வாழ்வு ஆரம்பிக்கப்பட்டது. எனினும், போராட்டங்களாகவே எனது அரசியல் வாழ்வு மாறிவிட்டது' என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில்,

2




## நல்லூர்க் கந்தனுக்கு கொடிச்சீலை வந்தது



யாழ்ப்பாணம், ஜூலை 24

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயபூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில்

2

## யாழ்ப்பாண மாவட்டத்தில் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கருத்து தெரிவிக்கையில் -

தேர்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டு வரும் இந்த சந்தர்ப்பத்தில் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் என்ற நோக்கில் கிராமத்திற்கு கிராமம் என்ற வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

அந்தவகையில் தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் 'கபே' அமைப்புக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. ஒரே கட்சியில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு எதிராக வெறுப்பூட்டத்தக்க பிரசாரங்கள் அதிகரித்துள்ளமையுடன், பொய்யான பிரசாரங்களும் அதிகளவில் பரப்பப்பட்டுள்ளன என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. எனவே வெறுப்பூட்டதக்க பிரசாரங்கள் அதிகரிக்கும்போது வன்முறைகளும் அதிகரிக்கும் என தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெளிவூட்டல்களை நாம் வழங்கியிருக்கிறோம்.

அந்த வகையில் வன்முறைகள் அதிகரித்த சில பகுதிகளை பொலிஸ் திணைக்களத்திற்கு அடையாளப்படுத்தியுள்ளோம். வன்னி மாவட்டத்தில் வவுனியா தொகுதியில் முறைப்பாடுகள் மிகவும் குறைவான நிலையில் காணப்படுகின்றமை பாராட்டத்தக்க விடயமாக இருக்கிறது. மன்னார் மாவட்டத்தில் வெறுப்பூட்டத்தக்க பேச்சுக்கள் மற்றும் பொய்யான பிரசாரங்கள் போன்ற முறைப்பாடுகள் அதிகளவில் கிடைத்துள்ளன.

குறிப்பாக கட்சிகளின் ஆதரவாளர்களே அதிகளவில் வன்முறையில் ஈடுபடுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அரசியல் வாதிகள் ஒன்றாகவே பயணிக்கிறார்கள். அதுபோல ஆதரவாளர்களும் ஒன்றாக பயணிக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

குறிப்பாக பொத்துவில், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது பிரதேசங்கள் வன்முறைகள் அதிகமாக இடம்பெறும் பகுதியாக எம்மால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், காத்தான்குடி, ஏறாவூர், கிண்ணியா, புல்மோட்டை மற்றும் வடக்கில் யாழ். மாவட்டம் போன்ற பகுதிகள் வன்முறைகள் தொடர்பாக முன்னிலையான இடத்தை பெறுகின்றது. வடகிழக்கிற்கு அப்பால் குருநாகல், மதுகம, தங்காலை போன்ற பகுதிகளை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற அழைப்பை விடுக்கின்றேன்.

முக்கியமாக வாக்களிப்பு தினத்தில் அதன் விகிதாசாரம் அதிகரிக்குமா என்பது சவாலான விடயம். கொவிட் -19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் அலையே இதற்கான முக்கிய காரணியாக இருக்கிறது. இம்முறை தபால் மூல வாக்களிப்பானது என்றுமில்லாத வகையில் குறைவடைந்திருக்கின்றது. எனவே வாக்களிப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு பல நிகழ்சித்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது.

வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சுகாதார நடைமுறைகளை பேணுவதுடன் சமூக இடைவெளியை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. வாக்களிப்பை அதிகரிக்கும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை 'கபே' அமைப்பும் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையை பொறுத்தவரை அரசுகள் தமக்கு தேவையான நேரங்களிலேயே தேர்தலை நடாத்தும் நிலைமைகள் ஏற்பட்டிருந்தது. அந்தவகையில் கொரோனா வைரஸ் தாக்கம் குறைவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவையாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு எதிர்வு கூறுகின்றது. எனவே சட்டம் இயற்றும் நாடாளுமன்றம் இல்லாமல் இந்த நாட்டிலே மக்கள் பயணிக்க முடியாது. எனவே தான் அதிகமான நிதியை செலவளித்து வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி இந்த தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடாத்துகின்றது. எனவே சவாலுக்கு மத்தியில் இந்த தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் நாட்டு மக்கள் இருக்கின்றார்கள் - என்றார்.

## பயிர்ச்செய்கையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு விவசாய நடவடிக்கைக்காக வழங்கப்பட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்து அப்பகுதி மக்கள மீள்குடியேறியபோது அப்பகுதி விவசாய நிலங்கள் அருகில் உள்ள சிலோன் தியேட்டர், வெலிஓயா, டொலர் பாம் ஆகிய கிராமங்களில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மை இனத்தவரால் செய்கை பண்ணப்பட்டது.

மக்கள் பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் அதனை மீட்டு அருகில் இருக்கும் சிங்கள குடியேற்றவாசிகள் மற்றும் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்கள் விவசாயம் செய்து வந்தனர். இந்த மக்களுக்கான விவசாய நடவடிக்கைக்காக தனிக்கல்லு குளமும் புனரமைத்து கொடுக்கப்பட்டது.

ஆனால், தற்போது அப்பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட மக்கள் செல்கின்றபோது இராணுவத்தினர் அந்த வயற்காணிகளுக்குள் மக்களைச் செல்லவிடாது வீதிகளில் நின்று திருப்பி அனுப்புவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## போராட்டங்களே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, நகர சபைத் தலைவர் நஹூஸீன் தலைமையில், மன்னார், உப்புக்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று, உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரிஷாத்,

19 வருட அரசியல் பயணத்தில், எல்லாக் காலமும் போராட்டத்துடனேயே நீச்சலடித்து வருகிறேன். உங்கள் ஊரான உப்புக்குளத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்த போது, அது முடிந்த பின்னரேயே கொழும்பிலிருந்து நான் இங்கு வந்தேன். என்னுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஹூனைஸ் பாரூக்கும் வந்திருந்தார். பிரச்சினைகள் முடிந்த பின்னர், நாம் இங்கு வந்த போதும், நடந்த அனைத்துப் பிரச்சினைகளையும் என் தலையில் கட்டி, நீதிமன்றப் படிக்கட்டுக்களை ஏற வைத்தார்கள். அங்கு கைகட்டி நிற்கும் நிலையை ஏற்படுத்தினார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் - என்றார்.

## நல்லூர்க் கந்தனுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும்.

அதன்படி யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல்மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலா சென்று சுபநேரத்தில் பூசைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25நாள்கள் இடம்பெறவுள்ளது.

## விக்கியை நேற்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியிலுள்ள முன்னாள் முதலமைச்சரின் இல்லத்துக்கு இன்று காலை திடீரெனச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையிலான விசேட சி.ஐ.டி. குழுவினரே இந்த விசாரணையை நடத்தியுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் விக்னேஸ்வரனால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தொடர்பாகவே இந்த விசாரணை அமைந்திருந்தது.

கேள்வி-பதில் வடிவில் அந்த அறிக்கை வெளியாகியிருந்தது. குறிப்பிட்ட அறிக்கை சிங்கள இணையத்தளம் ஒன்றில் வெளியாகியிருந்தது. இனங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் அந்த அறிக்கை அமைந்திருந்தது எனவும் குறிப்பிட்ட சிங்கள இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விக்னேஸ்வரனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்துமாறு விசாரணைக்காக வந்திருந்த விசேட சி.ஐ.டி. குழுவுக்கு உயர்மட்டம் உத்தரவிட்டிருந்தது. இது தொடர்பாக விக்னேஸ்வரனிடம் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி கேள்வி எழுப்பினார்.

உடனடியாகவே இது தொடர்பான ஆவணத்தைக் கையளித்த விக்னேஸ்வரன், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் தான் உறுதியாக இருக்கின்றார் எனவும் கூறினார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் மேலிடத்துக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்த பொலிஸ் அதிகாரி, தேவை ஏற்பட்டால் தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் வருவோம் எனவும் தெரிவித்துச் சென்றுள்ளார்.

## வாக்குச் சாவடிகளில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர்களின் ஆலோசனைகளுக்கு அமைய சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட சுகாதார குழுக்களினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் தேசப்பிரிய கூறினார்.

வாக்குச் சாவடிகள் தொற்று நீக்கம் செய்வது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி சுகாதார மருத்துவ அதிகாரிகள் வழங்குவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மீனவர் சடலமாக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன்பிடிபதற்காகச் சென்ற 72 வயதுடைய மீனவர் கடலில் தவறி வீழ்ந்துள்ளார். இந்நிலையில் சக மீனவர்கள், கடற்படையினர் இரண்டு நாள்களாகக் கடலில் தொடர்ந்து தேடியபோதிலும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் நேற்று காலை காங்கேசன்துறை கடற்கரையில் வயோதிபரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தாய், தந்தை விபத்தில் பலி 2 பிள்ளைகள் படுகாயம்

*யக்கல, கிரிந்திவெல வீதியில் மோட்டார் வாகனமொன்று மின்கம்பத்தில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.*

*நேற்று (23) இரவு 11.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*மோட்டார் வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அது மின்கம்பத்தில் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு சென்று விட்டு மீண்டும் திரும்பிய நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளமையுடன், இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர்.*

*காயமடைந்த இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

## பிரதமர் மஹிந்தவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி, பிரதமர் அலுவலகத்தின் முன்னால் இன்று அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

பெண்களின் மகப்பேற்று சுதந்திரம் என்பது ஒவ்வொரு கணவன் - மனைவியினதும் தனிப்பட்ட விடயமாகும். இவைகள் அரசியல் மேடையில் பேசப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டது.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**

**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com

**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**

**காலைக்கதிர்** Kalaikkathir

**பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்**

☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு
முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பெயர் கெடும் பொலிஸ் துறை

ஆளும் தரப்பின் ஏவல் படையாகவே இருப்போம் என்ற கீழத் தர நிலையை இலங்கைப் பொலிஸ் பேணும் வரை அதற்கு மதிப்பும் மாண்பும் கிட்டப் போவதில்லை.

ஆட்சி அதிகாரம் மாறும் போதெல்லாம், அதிகாரத்துக்கு வருவோரின் அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் பொலிஸ் உயரதிகாரிகள் நடந்து கொள்வதால், அந்தத் துறையின் மதிப்பு – மாண்பு – பெயர் – எல்லாம் சீர் கெட்டுப் போயின.

2005 தொடக்கம் 2015 வரையான இருண்ட ஆட்சிக் காலத்தில் பொலிஸ் துறை எப்படி நடந்து கொண்டது, எவ்வளவு கீழ்த்தர மட்டத்துக்குப் போனது என்பவை எல்லாம் நமக்குத் தெரிந்தவைதான்.

இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நவாலித் தேவாலயப் பகுதி மீது இலங்கை விமானப் படை வீசிய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் நூற்றியறுபதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையை ஒட்டி, அவர்களின் கால் நூற்றாண்டு கால நிறைவு நினைவை அஞ்சலியோடு அனுஷ்டிக்க உறவுகள் முயன்றபோது அதனைப் புலிகளின் மீளுருவாக்க முயற்சி என்று அர்த்தம் கற்பிக்க முயன்ற கேவலமான படைதான் இலங்கைப் பொலிஸ்.

அதிகாரத்தில் இருக்கும் எஜமானர்களின் அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கு அமையச் செயற்படும் ஏவல்படையே அது என்ற பேரவல நிலையை அதன் உயரதிகாரிகள் தொடர்ந்தும் பேணி வருகின்றனர்.

இந்தக் கேவலமான – பிற்போக்குத்தனமாக – ஒரு கட்டமைப்பாக அது செயற்படுவதாலோ என்னவோ சுமார் ஓராண்டாக அதற்கு நிரந்தரமான பொலிஸ் மா அதிபர் என்று ஒரு தலைவர் கூட இல்லை. பதில் பொலிஸ் மா அதிபர் என்ற பதவியின் கீழ்தான் அதன் காலம் ஓடுகின்றது.

இப்போது தேர்தல் சமயம். இந்த வேளையில் தமது அரசியல் எஜமானர்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றும் ஏவல் வேலையை பொலிஸ் பணியாக பொலிஸார் மேற்கொள்ளும் அவலம் நேர்ந்திருக்கின்றது.

அரசியல் தலைவர்கள், வேட்பாளர்கள், கட்சிப் பிரமுகர்கள் போன்றோருக்கு இந்தத் தேர்தல் சமயம் மிகமிக முக்கியமானது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணித் துளியும் மிக மிக அத்தியாவசியமானது.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான தமது அரசியல் எதிர்காலத்தை – தலைவிதியை – தீர்மானிக்கும் முக்கிய வேளை இது.

இந்தச் சமயத்தில், தமது எதிரணியில் இருக்கும் அரசியல் தலைவர்களை அவர்களின் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபடவிடாமல், விசாரணை என்ற பெயரில் அவர்களின் மனபலத்தை உடைத்து, பிரசார நேரத்தை முடக்கி, குழப்பத்தை ஏற்படுத்தும் ஆட்சித் தலைவர்களின் திட்டத்துக்கு பொலிஸார் கருவியாக அமைந்துள்ளனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இப்போதைய ஆட்சித் தலைவர்கள் அரசியல் களத்தில் தங்களின் பிரதான அரசியல் எதிரிகளாக அடையாளம் கண்டிருப்போரில் ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்கா போன்றோர் முக்கியமானவர்கள்.

இந்தத் தேர்தல் சமயத்தில் அவர்களை இலக்கு வைத்து, அவர்களின் பிரசார நடவடிக்கைகளைக் குழப்பும் விதத்தில் விசாரணை என்ற தந்திரோபாயத்தை முன்னெடுக்கின்றது பொலிஸ்.

தேர்தல் முடியும் வரை இத்தகையோரை விசாரணை என்ற பெயரில் தொல்லைப்படுத்தாதீர்கள் என்று பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் தேர்தல் ஆணையம் பணித்துள்ள போதிலும், நீதிமன்றில் விண்ணப்பித்து, நீதிமன்றம் வாயிலாக உத்தரவு எடுத்து, அவர்களைத் தொல்லை பண்ணி, இடைஞ்சல் செய்து, அவர்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் குழப்பும் கைங்கரியத்தை ஒப்பேற்றுகின்றது கீழ்தரமான நமது பொலிஸ்.

அந்த நடவடிக்கை இப்போது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.சிக்னேஸ்வரன் வரை நீண்டிருக்கின்றது.

கருணா அம்மானுக்கு எதிரான நடவடிக்கை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை நிராகரித்த மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர், தேர்தல் சமயத்தில் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளை விசாரணை என்ற பெயரில் தொல்லைப்படுத்தாதீர்கள் எனத் தேர்தல் ஆணையத் தலைவர் தெரிவித்த கருத்தைச் சுட்டிக்காட்டியே, அந்த மனுவைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்.

ஆனால் பொலிஸாரோ கீழ்நிலை நீதிமன்றங்களின் நீதிவான்கள் மூலம், இத்தகைய அரசியல்வாதிகளுக்கு எதிராக உத்தரவுகளை எடுத்து அவர்களை இந்தத் தேர்தல் நெருக்கடி சமயத்தில் தொந்தரவுபடுத்துகின்றனர்.

பொலிஸாரின் இந்தப் போக்கு, அத்துறையின் பெயரை நிரந்தரமாகக் கெடுக்கச் செய்து விடும்.

# விஞ்ஞாபனம் வெளியிட வக்கில்லாதோர் எங்களை விமர்சிப்பது வெட்கக்கேடானது

## மஹிந்தவைப் போட்டுத் தாக்குகின்றார் சஜித்

*கொழும்பு, ஜூலை 24*

*நாடாளுமன்றத் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை வெளியிட வக்கில்லாமல் அஞ்சுகின்ற அரசு, எமது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் திரிவுபடுத்துவதும், விமர்சிப்பதும் வெட்கக்கேடானது.*

*- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.*



இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கிடையில் ஒருமித்த பண்புகள் காணப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலுக்கென அரச கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி விஞ்ஞாபனம் வெளியிடவில்லை. ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்தே அரசு சமாளிக்கின்றது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரசு நிறைவேற்றவில்லை. அதனால் நாடாளுமன்றத் தேர்தலுக்கென விஞ்ஞாபனத்தை வெளியிட அரசு அச்சமடைகின்றது.

இப்படிப்பட்ட அரசு எமது கட்சியின் விஞ்ஞாபனமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனமும் ஒத்துப்போகின்றது எனத் தேர்தல் மேடைகளில் விமர்சிப்பது வெட்கக்கேடானது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உணர்வுகளைப்புரிந்துகொண்டு அவர்களின் ஆணையைப் பெறும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

எமது கட்சி நாட்டிலுள்ள சகல மக்களினதும் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களின் ஆணையைப் பெறும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும், ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் வடக்கிலும் தெற்கிலும் எந்த மாற்றமும் இல்லாமல் தெரிவித்து வருகின்றோம். அதைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கியுள்ளோம். ஆனால், அரசு அதைத் திரிபுபடுத்தி எமக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது – என்றார்.

# நல்லூர் உற்சவத்தை தடையின்றி நடத்த மக்கள் ஒத்துழைப்பு தேவை

## யாழ். அரச அதிபர் கோரிக்கை

(எஷ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தினை தடையின்றி நடத்துவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனக் கோரியுள்ளார் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஆலயஉற்சவம் தொடர்பில்கருத்துதெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாளை நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாக இருக்கின்றது.

யாழ் குடாநாட்டில் நிறைய ஆலயங்களில் திருவிழாக்கள் வழமைபோல் இடம்பெற்று வருகின்றன. அதேபோலத்தான் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்த நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு அதற்குரிய முன்னேற்பாடுகள் யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் ஏனைய திணைக்களங்கள், பொலீஸ், இராணுவத்துடன்இணைந்து நாங்கள் மேற்கொண்டுள்ளோம்

அவை அனைத்தும் தற்போது பூரணபடுத்தப்பட்டுள்ளன. எனினும் தற்போது பக்தர்கள் வருகை அதிகளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழமையாக நல்லூர் ஆலய உற்சவத்திற்கு இலங்கையிலிருந்து மட்டுமல்ல வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் வருவது வழமை.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் கொரோனா அச்சம் காரணமாக சில தளர்வுகள் மற்றும் கட்டுப்பாட்டுடன் இந்த உற்சவத்தினை நடத்துவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.



வழமைபோன்று இன்று தொடக்கம் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல கடைகள், வியாபார நிலையங்களிற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அன்னதானம், காவடி மற்றும் பக்தர்களின் வழிபாட்டு முறைகள் சிலவற்றிற்கும் இம்முறை தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் நல்லூர் ஆலய உற்சவத்தினை சிறப்பாக மேற்கொள்வதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியமாகக் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு உள்ளும் வெளியிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மக்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே வரும் பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதேபோல் இந்த ஆலய திருவிழாவின்போது பெரும் திரளாக மக்கள் கூடி சமூகத்தொற்று ஏற்படா வண்ணம் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்வதன் மூலமாகவே நல்லூர் ஆலய உற்சவத்தினை தொடர்ச்சியாக 25 நாள்களும் எந்தவித தடையுமின்றி நடாத்த முடியும் –என்றார்.

# இந்தியாவில் கொரோனாப் பரவல் உச்சத்தில்: நேற்று மட்டும் ஐம்பதாயிரம் பேருக்குத் தொற்று

## கடந்த 24 மணி நேரத்தில் 740 பேர் பலி

இந்தியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 49 ஆயிரத்து 310 பேருக்கு கொரோனா உறுதியாகி இருப்பதால், அத்தொற்று பாதித்தோர் எண்ணிக்கை 12 லட்சத்து 87 ஆயிரத்து 945ஆக அதிகரித்துள்ளது.

இதேபோல் கடந்த 24 மணி நேரத்தில் 740 பேர் உயிரிழந்தமையால் நாட்டில் கொரோனாவுக்கு பலியானோரின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 601ஆக உயர்ந்துள்ளது.

இது, தவிர்த்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளில் 4 லட்சத்து 40 ஆயிரத்து 135 பேர் சிகிச்சை பெறுகின்றனர். மேலும் மருத்துவ சிகிச்சையில் 8 லட்சத்து 17 ஆயிரத்து 209 பேர் குணமாகி உள்ளனர்.

மகாராஷ்டிராவில் பாதிப்பு எண்ணிக்கை 3 லட்சத்து 47 ஆயிரத்து 502ஆகவும், உயிரிழப்பு 12,854ஆகவும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் பாதிப்பு 1லட்சத்து 92 ஆயிரத்து 964ஆகவும், டெல்லியில் பாதிப்பு 1 லட்சத்து 27 ஆயிரத்து 364ஆகவும் உயர்ந்துள்ளது.



# பிறந்த குட்டியைப் பரிதவிக்க விட்டுச் சென்ற தாயுடன் சேர்வதற்குக் குட்டி யானை பிளிறல்

## குடகு அருகே இடம்பெற்ற மனதை உருகும் காட்சி

கர்நாடக மாநிலம் குடகு அருகே, தாய் யானையுடன் சேர குட்டி யானை போராடிய காட்சிகள் காணொலியாக வெளியாகி உள்ளன.

விராஜ்பேட்டை அருகே கோப்பித் தோட்டத்திற்கு வந்த யானைக் கூட்டம் ஒன்றில், கர்ப்பிணி யானைக்கு குட்டி பிறந்தது.

எதிர்பாராதவிதமாக அந்தக் குட்டி பள்ளத்தில் விழுந்ததால் தாய் யானை செய்வதறியாது திகைத்தது. குட்டியை மீட்க முயற்சித்தும் முடியாததால் தாய் யானை சோகத்துடன் புறப்பட்டுசென்றது. தாயைக் காணாது தவித்த குட்டி யானை பள்ளத்தில் இருந்தபடி பிளிறியது.

குட்டி யானை விழுந்து கிடப்பதைக் கண்ட கோப்பித் தோட்ட உரிமையாளர் அளித்த தகவலின் பேரில் அங்கு வந்த வனத்துறையினர் பள்ளத்தில் கிடந்த குட்டி யானையை குளிப்பாட்டி உணவு அளித்தனர். மேடான பாதையை உருவாக்கியதும் அதன் வழியாக மேலே வந்த குட்டியானை தளிர் நடை போட்டுத் தாயை தேடியவாறு நடக்க முயன்றது. அதற்குள் குட்டி யானையின் பிளிறல் சத்தம் கேட்ட தாய் யானை அங்கு வந்து தனது குட்டியை தும்பிக்கையால் அணைத்துச் சேர்த்துக் கொண்டது.



# கொரோனா கவனிப்பு மையத்தில் சிறுமிக்கு பாலியல் தொல்லை!



டெல்லியில் கொரோனா கவனிப்பு மையத்தில் அனுமதிக்கப்பட்டு இருந்த 14 வயது சிறுமிக்கு, மற்றொரு கொரோனா நோயாளி பாலியல் தொல்லை அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லேசான அறிகுறிகளுடன் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க, சர்தார்பூரில் 10 ஆயிரம் படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா கவனிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த 14 வயது சிறுமி கழிவ றைக்கு சென்றபோது, அங்கு அனுமதிக்கப்பட்டு இருந்த 19 வயது இளைஞன் ஒருவன் சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்ததான் எனக் கூறப்படுகிறது. கடந்த 15 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சிறுவனின் முட்டை அடுக்கிய வண்டியை லஞ்சம் தராததால் கவிழ்த்த அதிகாரி



தள்ளுவண்டியில் முட்டை விற்ற சிறுவனிடம் லஞ்சம் கேட்ட அதிகாரி லஞ்சம் கொடுக்க மறுத்தமையால் முட்டை வண்டியைக்கவிழ்த்துவிட்டுஅட்டூழியம்

மத்தியப் பிரதேசம் இந்தூரில் லஞ்சம் கொடுக்காதசிறுவனின்தள்ளுவண்டியை மாநகராட்சி அதிகாரிகள் கவிழ்த்ததில் அதிலிருந்த முட்டைகள் அனைத்தும் உடைந்துவீணாயின. இந்தூரில்சாலையோரம் தள்ளுவண்டியில் முட்டைவிற்றுக்கொண்டிருந்த14வயதுச்சிறுவனிடம் மாநகராட்சி அலுவலர் ஒருவர் நூறு ரூபாய் லஞ்சம் கேட்டார் எனக் கூறப்படுகிறது. லஞ்சம் கொடுக்கச் சிறுவன் மறுத்ததால் முட்டை வைத்திருந்த தள்ளுவண்டியை அந்த அலுவலர் புரட்டிக் கவிழ்த்து விட்டார். இதனால் அதிலிருந்த நூற்றுக் கணக் கான முட்டைகள் அனைத்தும் உடைந்து வீணாயின. கொரோனா பரவலைத் தடுக்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் கடுமையாகச் செயல்படுத்துவதாகக் கூறி அரசு அலுவலர் ஒருவர் செய்த இந்த அட்டூழியம் சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.

# 80 வயதில் கொரோனாவில் இருந்து மீண்ட குஜராத் முன்னாள் முதல்வர்!

## பளுதூக்கும் பயிற்சியில் ஈடுபட்டு அசத்தல்

கடந்த 1997 ஆம் ஆண்டு குஜராத் மாநில முதல்வராக இருந்தவர் சங்கொர்சிங் வாகேலா. காங்கிரஸ் கட்சியிலிருந்த போது, அவர் குஜராத் முதல்வரானார். 2017 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியிலிருந்து அவர் விலகி தனி கட்சி உருவாக்கினார்.

கடந்த மாதத்தில் இவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட வாகேலா பிறகு, காந்திநகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். ஜூலை 16 ஆம் திகதி கொரோனாவிலிருந்து குணமாகி வீட்டுக்கு திரும்பினார்.

வீடு திரும்பிய வாகேலா முடங்கி விடவில்லை. தீவிரமாக உடற்பயிற்சியில் ஈடுபட தொடங்கினார். தினமும் ஜாக்கிங் செல்வதோடு, கடினமான பளு தூக்கும் பயிற்சியிலும் அவர் ஈடுபட்டுள்ளார். பயிற்சியில் ஈடுபடும் புகைப்படங்களை சமூகவலைத் தளத்திலும் வெளியிட்டுள்ளார். Body fit+ Mind fit = Life hit என்ற தலைப்பில் சங்கொர்சிங் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் வைராலாகியுள்ளன.

முன்னதாக கொரோனாவிலிருந்து குணமடைந்ததும் தான் குணமாக வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி உள்ளிட்டவர்களுக்கு நன்றி தெரிவித்து சங்கொர்சிங் வாகேலா வீடியோ வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசியல்வாதியாக இருந்தாலும் சங்கொர்சிங் வகேலா உடலை கட்டுக் கோப்புடன் வைத்துக்கொள்ள ஆசைப்படுபவர். இதனால், சிறுவயதிலிருந்தே உடற்பயிற்சியில்





ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். பிடித்த உணவை நன்றாக சாப்பிடுவதும் அதிகமாக பால் குடிப்பதும் தன் உடல் பலத்தின் ரகசியம் என்று சங்கொர்சிங் வாகேலா கூறுவது வழக்கம். சங்கொர்சிங் வாகேலாவுக்கு ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவையும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# செயற்கைக் கோள்களை தாக்கி அழிக்கும் ஆயுதத்தை ரஷ்யா சோதனை செய்ததா?

## அமெரிக்காவும் பிரிட்டனும் குற்றச்சாட்டு



விண்வெளியில் செயற்கைக் கோள்களை தாக்கி அழிக்கும் ஆயுதத்தை ரஷ்யா சோதனை செய்ததாக, அமெரிக்காவும் பிரிட்டனும் குற்றம்சாட்டியுள்ளன.

ஆக்கபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே விண்வெளியைப் பயன்படுத்துவது என அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா உள்ளிட்ட 100 நாடுகள் உடன்பாடு செய்துகொண்டுள்ளன.

இந்நிலையில், சிறப்புக் கருவி மூலம், தங்கள் நாட்டு செயற்கைக்கோள்களை மிக அருகில் சென்று பரிசோதிக்கும் செயல்முறை கடந்த ஜூலை 15ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருந்தது.

ஆனால், விண்வெளியில் செயற்கைக் கோள்களை தாக்கி அழிக்கும் ஆயுதத்தை ரஷ்யா சோதனை செய்ததாக, அமெரிக்காவும் பிரிட்டனும் குற்றம்சாட்டியுள்ளன.

தங்களுடைய மற்றும் கூட்டணி நாடுகளின் செயற்கைக்கோள்களை அச்சுறுத்தும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதே ரஷ்யாவின் உள்நோக்கம் என அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

ரஷ்யாவின் இதுபோன்ற செயல்கள், விண்வெளியில் சிதைகூளங்கள் வடிவில் கழிவுகளை உருவாக்கும் என்று பிரிட்டன் குற்றம்சாட்டியுள்ளது.

# ஹூஸ்டன் சீனத் தூதரகம் உளவுபார்க்கும் மையமாம்

## அமெ. வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு



ஹூஸ்டனில் மூடப்பட்டுள்ள சீனத் தூதரகம் உளவு பார்க்கும் மையமாகவும், அறிவுசார் சொத்துரிமைகளைக் களவாடும் இடமாகவும் விளங்கியதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்குத் தடுப்பு மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் தகவல்களைத் திருடியதாகச் சீனாவைச் சேர்ந்த இருவர் மீது அமெரிக்க நீதித்துறை வழக்குப் பதிவு செய்தது.

இதையடுத்து ஹூஸ்டனில் உள்ள சீனத் தூதரகத்தை மூடுவதற்கு அமெரிக்கா உத்தரவிட்டது. இது குறித்து விளக்கம் அளித்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ, ஹூஸ்டனில் மூடப்பட்டுள்ள சீனத் தூதரகம் உளவு பார்க்கும் மையமாகவும், அறிவுசார் சொத்துரிமைகளைக் களவாடும் இடமாகவும் விளங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகத் தேர்தலைக் கோரி தாய்லாந்தில் ஆர்ப்பாட்டங்கள்

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில், ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், பிரதமர் Prayuth Chan - ocha வின் உருவப்படங்களை எரித்து, தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

முன்னாள் இராணுவத் தலைவரான ஆன Prayuth Chan - ocha, ஆட்சியை கைப்பற்றி 6 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், ஜனநாயகத் துக்கு ஊறு விளைவிக்கும் விதமாக, சட்டத்தில் செய்த திருத்தங்களை அகற்றி விட்டு, முறையாக தேர்தல் நடத்துமாறு இளைஞர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கடந்த 60 நாள்களுக்கு மேலாக தாய்லாந்தில் புதிதாக கொரோனாத் தொற்று பரவாததால், பல இடங்களில் ஒன்றுகூடும் இளைஞர்கள், பிரதமருக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

# அமெரிக்காவில் கொரோனா அதிகம் பரவக் காரணம் இன, நிற பாகுபாட்டுக்கு எதிரான போராட்டம்தானாம்

## அதிபர் டொனால்ட் ட்ரம்பின் கண்டுபிடிப்பு இது!



அமெரிக்காவில் இன மற்றும் நிற பாகுபாட்டுக்கு எதிராக நடந்த போராட்டங்களால் தான் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளதாக அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டி உள்ளார். அந்நாட்டில் கொரோனா தொற்றால் 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அவர், பொலிஸுக்கு எதிராகவும் இனபாகுபாடுக்கு எதிராகவும் போராட்டம் நடத்திய பிளாக் லைவ்ஸ் மேட்டர் அமைப்பை சேர்ந்த இளைஞர்களே கொரோனா பரவலுக்கு முக்கிய காரணம் என்று தெரிவித்தார்.

விடுமுறை நாள்கள், பார்கள், கடற்கரைகளில் மக்கள் அதிகம் கூடியதும், சுமார் 3 ஆயிரம் கிலோ மீட்டர் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் மெக்சிகோவும் நோய் பரவலுக்கான காரணிகள் என்று அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

## நாஜி வதை முகாமில் 5,232 பேர் கொலை:

# 75 வருடங்கள் தொடர்ந்து நடந்த வழக்கில் 93 வயது முதியவர் குற்றவாளி எனத் தீர்ப்பு!

இரண்டாம் உலகப்போர் நடந்த காலகட்டத்தில் ஹிட்லரின் 'நாஜி வதை கூடத்தில் 5,232 பேர் கொல்லப்பட்ட வழக்கில், 93 வயது முதியவரைக் குற்றவாளியாக அறிவித்துள்ளது, ஜேர்மனி நீதிமன்றம்.


ஜேர்மனியில், ஹிட்லர் ஆட்சிக்காலத்தில் அரசியல் மற்றும் இராணுவக் கைதிகளை அடைத்து வைக்க பிரத்தியேகச் சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டன. சித்திரவதைக் கூடங்களாகச் செயல்பட்ட இந்தச் சிறைக் கூடங்கள் 'நாஜி கொன்சன்ட்ரேன் காம்ப்' என்று அழைக்கப்பட்டது. இந்த வதைக் கூடத்தில் 'ஸ்டட்த் ஒவ் காம்ப்' என்பது முக்கியமானது.

கடந்த 1939 ஆம் ஆண்டிலிருந்து 1945 ஆம் ஆண்டு வரை செயல்பட்ட இந்த வதைக் கூடத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 60,000 பேருக்கும் மேல் சித்ரவதை செய்து கொல்லப்பட்டனர்.

இந்தக் வதை கூடத்தில் புரூனோ டே என்கிற இளைஞரும் வேலை செய்தார். அப்போது புரூனோ டேவுக்கு வயது 17 வயதே ஆகியிருந்தது. 1944 - 1945 ம் ஆண்டுகளில் மட்டும் இந்த முகாமில் 5,232 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கொல்லப்பட்டதில் புரூனோ டேவுக்கு தொடர்பு இருந்தது. போரில் சோவியத் யூனியனால் ஹிட்லரின் படைகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஸ்டட்த் ஒவ் காம்பில் இருந்தவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். புரூனோ டேவும் கைது செய்யப்பட்டார். 5,232 பேர் கொல்லப்பட்ட வழக்கு ஹம்பர்க் நகர நீதிமன்றத்தில் நடந்து வந்தது. நேற்று இறுதிக்கட்ட விசாரணை முடிந்து புரூனோ டே குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார்.

அரசுத்தரப்பு வழக்கறிஞர் புரூனோ டேவுக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்த வழக்கில் புரூனோ டேவின் முதுமையைக் கருத்தில் கொண்டு தண்டனை அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது, 93 வயதாகும் புரூனோ டே, முதுமை காரணமாக நீதிமன்றத்துக்கு வீல் சேரில் அழைத்து வரப்பட்டார். நீதிபதி குற்றத்தை உறுதி செய்ததை கேட்டதும் கண் கலங்கிய புரூனோ டே, நாஜி முகாம்களில் சித்ரவதை செய்து கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்காக நான் இன்று மன்னிப்பைக் கோருகிறேன். அதுபோன்ற கொடுமைகள் இனி யாருக்கும் நடக்கக்கூடாது. அப்போது நடந்த திகில் நிகழ்வுகளும், துன்பக் காட்சிகளும் என்னை என் வாழ்நாள் முழுவதும் துன்புறுத்தி வருகின்றன என்று வேதனையுடன் கூறியுள்ளார்.



ஜேர்மனியில், நாஜி வதைக் கூடங்கள் தொடர்பாக மேலும் 12 வழக்குகள் நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயக போராளிகள் கட்சி கூட்டமைப்புக்கு முழு ஆதரவு!

## சம்பந்தனுடனான சந்திப்பில் முடிவு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை,ஜூலை25

**ஜனநாயக போராளிகள் கட்சியினர் தமது மத்திய குழுவின் தீர்மானத்திற்கு அமைய தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குத் தமது பூரண ஆதரவினை எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பாக நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் சம்பந்தனுக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினருக்கும் இடையே நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு இரா.சம்பந்தன் கருத்து தெரிவிக்கையில் –

எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயகப் போராளிகள் கட்சி தமது ஆதரவை எமக்கு வழங்கவுள்ளார்கள். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பிறகும் நாம் இணைந்து செயற்பட இருக்கின்றோம். தமிழ் மக்களுடைய தீர்வுக்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக நாம் திறந்த மனதுடன் பேசவுள்ளோம்.

இவர்கள் எமக்கு ஆதரவு வழங்குகின்றனர். அவர்கள் எமது போராளிகள் என்பதன் அடிப்படையில் நாம் அவர்களை வரவேற்கின்றோம். ஒருமித்த நாட்டுக்குள், பிரிபடாத நாட்டுக்குள், எமது மக்கள் கௌரவமாக, சுதந்திரமாக, சமத்துவமாக வாழவேண்டும் என்ற நோக்கிலேயே நாம் செயற்படுவோம். – என்றார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக ஜனநாயக கட்சியின் செயலாளர் கதிர் கருத்து தெரிவிக்கையில் –

ஜனநாயகப் போராளிகள் கட்சியினரான நாம் தமிழ்த் தேசியம் தொடர்பாக சம்பந்தன் ஐயாவுடன் பல விடயங்களை பேசினோம். எதிர்காலத்தில் எவ்வாறு எமது தமிழ் தேசியத்தை பலப்படுத்துவது என்பது தொடர்பாக ஐயாவோடு பேசியுள்ளோம் .

முன்னாள் போராளிகள் தொடர்ச்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பயணிப்பதாக தெரிவித்துள்ளோம். தமிழர்களுடைய உரிமையைப் பெறுவதற்கு எவ்வாறு நாம் ஜனநாயக ரீதியாக உறுதியாகவும் நிதானமாகவும் பயணித்து வருகின்றோம் என்பதை ஐயா எமக்கு தெளிவாக கூறியிருந்தார்.

ஐயாவுடைய எண்ணமும் மன உறுதியும் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான சுதந்திரத்தைப் பெற்றுத் தரும் என்பதனை இந்த இடத்தில் உறுதியாக கூறிக் கொள்ள விரும்புகின்றோம். – என்றார்.

# தமிழர்கள் எதைக் கேட்டாலும் அது சிங்களவர்களுக்குப் பிரிவினையே!

## சித்தார்த்தன் பதிலடி



தமிழர் தரப்பு எதைக் கேட்டாலும் சிங்களப் பேரினவாதிகளுக்கு அது பிரிவினையே. எனவே, இதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் கோரிக்கையை முன்வைத்துள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் சரியானதாகவே இருக்கும்.

தமிழர் தரப்பு எதனை வலியுறுத்தினாலும் பிரிவினைவாதத்தைக் கோருகின்றார்கள் என்றே தென்னிலங்கை தலைவர்களும், கடும்போக்குவாத பௌத்த தேரர்களும் பரப்புரை செய்கின்றார்கள். இதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

அரசியல் தீர்வு மட்டுமன்றி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இந்த முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் குறிப்பிட்டுள்ளாளோம்.

நாம் அரசியல் தீர்வையும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஒரு சமாந்தரக் கோடுகளில் கொண்டு செல்லவுள்ளோம். இதுவே எமது நோக்கமாகவுள்ளது – என்றார்.

# 3,150 போதைப்பொருள் முத்திரை: சந்தேகநபருக்கு விளக்கமறியல்

போதைப்பொருளினால் தயாரிக்கப்பட்ட முத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

போதைப்பொருளினால் தயாரிக்கப்பட்ட எல்.எஸ்.டி. முத்திரைகள் 3,150 ஐ, தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்தச் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டிருந்தார்.

கொள்ளுப்பிட்டி, பகத்தலே வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த முத்திரைகளுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரை புறக்கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தியபோது, அவருக்கு ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# வவுனியா ரயில் பாதையை நவீனமயமாக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 24

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையிலான ரயில் மார்க்கத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சில் இன்று இடம்பெற்ற ரயில் மார்க்கங்களை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான மதிப்பீட்டுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் மார்க்கத்தில் ரயில்கள் மிக வேகமாக பயணிக்க முடியும். அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையிலான ரயில் மார்க்கம் நவீனமயப்படுத்தப்படாததால், அந்த பகுதி மிகவும் பாழடைந்து காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால் அநுராதபுரம் – வவுனியா ரயில் மார்க்கத்தைச் சில மாதங்களுக்கு மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் அமைச்சருக்கு அறிவித்துள்ளன எனப் போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில் மார்க்கத்தை நவீனமயப்படுத்தத் தேவையான தண்டவாளங்கள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையில் இருந்து கதிர்காமம் வரையான ரயில் மார்க்கத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# சமவுரிமையை ஏற்பவர்களுடன் இணைந்து பணியாற்றத் தயார்

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

சமவுரிமையுடன் வாழ்வதை யார் ஏற்கிறார்களோ அவர்களுடன் இணைந்து பணியாற்றத் தயார் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாருடைய அரசு ஆட்சியில் இருக்கின்றது என்பது கேள்வியல்ல. யார் எம் தேசிய இனமும் இந்நாட்டின் சம உரிமையுடன் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்று நினைக்கின்றனரோ அவர்களுடன் இணைந்து பணியாற்ற நாம் தயார். அந்த அங்கீகாரத்தை ஏற்காதவரை எமது போராட்டமும் தொடரும்.

எமது நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் எமக்குரிய அதிகாரம் வழங்கப்படவேண்டும். மாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். இதற்குச் சாக்குப் போக்குச் சொல்லும்வரை இந்த நாடு முன்னேறுவதற்கு இடமில்லை

அரசியல் உரிமையும் அதிகாரமும் இல்லாமல் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது இராஜதந்திர தோல்வியை மூடிமறைப்பதற்காக தற்போது அரசியல் தீர்வுக்கு எத்தனைகாலம் எடுக்கும் என்பது தெரியாது. அதுவரையில் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியைப் பிற்போட முடியாது என்ற முழக்கத்தை முன்வைத்து மக்களை திசைதிருப்பும் நோக்கில் அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் ஆணை தாருங்கள் என்று இத்தேர்தல் பரப்புரைகளில் கூறிவருகின்றது. ஆனால், நல்லாட்சி அரசுக்கு முண்டுகொடுக்கும் போதும் அந்த அரசின் பாதுகாப்பு செலவுக்கு இரட்டிப்பு தொகை ஒதுக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்துக்கும் கையுயர்த்தி ஆதரவு தெரிவித்தபோதும் ஏன் அபிவிருத்தி குறித்து கூட்டமைப்பு பேசவில்லை?

எமக்கான அதிகாரப்பகிர்வை வழங்கவே முடியாது என்று இன்றைய ஆட்சியாளர்கள் கூறுவதிலிருந்து எமக்கு உரித்துடைய அரசியல் உரிமையைத் அவர்கள் பறித்து வைத்திருக்கின்றார்கள் என்பதும் தெளிவாகின்றது. இதற்கு எதிராக மக்களை ஓரணியில் திரட்ட வேண்டிய சூழலில், இதற்கான கட்டமைப்பை ஏற்கனவே கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடமையைச் செய்யாமல் விட்டதை மறைப்பதற்கே இன்று அபிவிருத்திப் போர்வையை போர்த்துக்கொண்டு மக்களிடம் வாக்கு கேட்கின்றது.

இதுவரை காலமும் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக உருவாக்குவதற்காகவும் மக்களின் அபிலாகைளை மக்களின் பங்களிப்புடன் முன்னெடுப்பதற்காகப் போராடிய நாம், அந்த முயற்சி பலனளிக்காமையால் இன்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்து கூட்டமைப்பு செய்யத் தவறிய விடயத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றோம். எனவே, வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தங்கள் ஆதரவைச் சிந்தாமல் சிதறாமல் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் – என்றார்.

# சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வறிக்கையைக் கோரினார் வடக்கு ஆளுநர்!

வடக்கு மாகாணத்தில் அனைத்து சிறுவர்களும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்களா என்பது தொடர்பான ஆய்வறிக்கையைக் கோரியுள்ளார் ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ்.

மேலும், சீர்திருத்த பாடசாலையில் உள்ளவர்களை விரைவில் சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அச்சுவேலியிலுள்ள சான்று பெற்ற சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையின் புதிய பாடசாலைக் கட்டடத் தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சாள்ஸ் நேற்று திறந்துவைத்தார்.

அந்த நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர், கல்வி அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், கோப்பாய் பிரதேச செயலாளர், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நீதிமன்றங்களால் சீர்திருத்தத்துக்காக அனுப்பப்பட்ட 38 சிறுவர்கள் இங்கிருக்கின்றனர். இந்தச் சிறுவர்கள் ஏன் தங்களுடைய வாழ்நிலையிலே இருந்து தவறிய வழியில் சென்றுள்ளனர் என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியுள்ளது. உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி சிறுவர்கள் 13 வயது முதல் 19 வயது வரையுள்ள காலகட்டத்தில் அவர்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகின்றது.

அவர்களின் பதின்பருவத்தில் ஏற்படும் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த மாற்றங்களுக்கு ஏற்ப அவர்களின் சூழ்நிலைகளும் வழிகாட்டல்களும் சரியான முறையில் இருக்கின்றபோது அவர்கள் சரியான பாதையில் கொண்டு செல்லப்படுகின்றார்கள். இந்தக் காலகட்டம் அவர்களுக்கு ஒரு புரட்சிகரமான காலகட்டம். அக்காலகட்டத்தில் செய்கின்ற சிறு விடயங்கள் கூட அவர்களின் இயல்பான வாழ்வுக்கு மாற்றமானதாக இருக்கும்.



அவற்றைக் குற்றமென்று சொல்வதைவிட தவறுகள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தச் செயல்கள் புரட்சிகரமானதாகவிருக்கும். அவற்றைச் சரியான முறையில் நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்கள் வாழும் குடும்பங்கள், பாடசாலைகள், சூழல்கள் மற்றும் சமுதாயம் ஆகியவற்றுக்கே உள்ளது. அவ்வாறு சரியாக நெறிப்படுத்தப்படாததால் இவர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சீர்திருத்தப்படும் இடங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

சீர்திருத்தத்துக்காக அனுப்பபட்டுள்ள இவர்கள் குற்றவாளிகளல்லர். அவர்களை இந்தநிலைக்குத் தள்ளிய குடும்பமும் சூழலும் சமுதாயமும்தான் குற்றவாளிகள். கனவுகளோடும் உற்சாகத்தோடும் வாழவேண்டிய இளமைக்காலத்தை இவர்கள் இங்கு கழிப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதை நினைக்கும்போது என் இதயம் கனக்கின்றது. இவர்கள் குற்றவாளிகளல்லர்; இவர்கள் தவறிழைத்தவர்கள். இவர்களை வழிநடத்த வேண்டியது எமது கடமை.

இந்த 38 சிறுவர்களும் எந்தச் சூழ்நிலைகளிலே தவறிழைத்தார்கள்?, அவற்றுக்கான உண்மையான காரணங்களைக் கண்டறிந்து அவர்களின் மனநிலையை மாற்றி மீண்டும் அவர்களை இந்தச் சமூகத்தோடு இணைக்கவேண்டும்.

அதற்கான அனைத்துப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுவர்கள் செய்ய விரும்பும் சில விடயங்களைச் செய்யவிடாமல் தடுக்கப்படுகின்றபோது அவர்கள் வன்முறையிலே ஈடுபடுகின்றார்கள். எனவே, அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டியது பெற்றோர்களின் முக்கிய கடமையாகவுள்ளது. சிறு வயதிலே அடக்கப்பட்ட உணர்வுகளை அவர்கள் இளைஞர்களாக வளரும்போது சமூக விரோத செயல்களாகவும் தீவிரவாத செயல்களாகவும் வெளிக்காட்டுகின்றார்கள் என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

எனவே, இந்த உளவியலை நாம் சரியாகப் புரிந்துகொண்டு அவர்களை நெறிப்படுத்த வேண்டும். இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் அவர்கள் செய்யும் சிறு பிழைகளையும் குற்றங்களாகப் பார்க்கும்போதுதான் அவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்புவது பெருங்குற்றம். அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் தங்களுடைய சிறுவர் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் இணைந்து மாகாணத்திலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உடன் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் பணித்துள்ளேன். இது சம்மந்தமான ஆய்வறிக்கையை என்னிடம் கையளிக்குமாறும் கேட்டுள்ளேன் – என்று தெரிவித்தார்.



# பஹ்ரைனிலிருந்து வந்த 126 பேர் வீடு திரும்பினர்


பஹ்ரைனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த 126 பேர், விமானப்படையின் இரணைமடு முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்துகொண்டு தங்களது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையமானது, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸின் ஆலோசனைக்கு அமைய, அனைத்து வசதிகளுடனும் இயங்கி வருகின்றது.

இரணைமடு விமானப்படை முகாமின் கட்டளையிடும் அதிகாரி குறூப் கப்டன் ரொஹான் பத்திரண உள்ளிட்டோரின் மேற்பார்வையின் கீழ், தனிமைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களை அவமதிப்பதன் மூலமாக வாக்களிப்பு வீதத்தை குறைக்க நாடகம்

## மு.கா.தலைவர் ஹக்கீம் குற்றச்சாட்டு



முஸ்லிம்களை அவமதிப்பதற்கும் அவர்களின் வாக்களிப்பு வீதத்தைக் குறைப்பதற்கும் பல நாடகங்கள் இடம்பெறுகின்றன. மக்கள் புத்திசாலித்தனமாக சிந்தித்து இந்த சதி முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 95 வீதமான உறுப்பினர்களையும் ஐந்து தலைவர்களையும் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியே தேர்தலில் வெற்றிபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி தெகியங்கவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை என்ற பெயரில் அரசு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. இதற்கு இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் அதிக முக்கியத்துவத்தை வழங்குகின்றது. இதன் மூலம் அவர்கள் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளை பெறுவது குறித்து கவனம் செலுத்துகின்றனர்.

அவர்கள் தற்போது தமக்குள்ள வாக்கு வங்கியைக் காப்பாற்ற நினைக்கின்றனர். நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். ஆனால், மக்கள் புத்திசாலிகள். அவர்கள் இந்த வலையில் விழமாட்

# மன்னாரில் தேர்தல் தொடர்பாக இதுவரை பதினாறு பேர் கைது!

## ஒன்பது வான்களும் தடுத்துவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 25

2020 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் 16 பேரும் கைது செய்யப்பட்டுசட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 9 வான்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் 35 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 9 முறைப்பாடுகள் பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில் அந்த 9 முறைப்பாடுகள் தொடர்பிலேயே இந்தக் கைதுகளும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 16 சந்தேக நபர்களும் 6 அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்பட்டது. மற்றும் 9 வான்களும் அக்கட்சிகளைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு பொலிசாரிடம் பாரப்படுத்தப்பட்ட இந்த விவகாரம் பொலிஸாரினால் நீதி மன்ற நடவடிக்கைக்கு எிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## தப்பிச் சென்ற கொரோனா நோயாளி புலனாய்வுப் பிரிவால் மடக்கிப் பிடிப்பு

முல்லேரியா தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் தப்பிச் சென்ற கொரோனா நோயாளி, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

போதைப்பொருளுக்கும் அடிமையான, குற்றச் செயல் தொடர்பான சந்தேகநபரான குறித்த நபர், இன்று அதிகாலை வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்ற நிலையில், அவரைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியிருந்தனர்.

இந்தநிலையில், இராணுவ புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வைத்து அவரைக் கண்டுபிடிக்க முடிந்தது என இராணுவ ஊடகப் பேச்சாளர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட அவர் மீண்டும் முல்லேரியா தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையுடன் பொலிஸாரின் கண்காணிப்பில் சேர்க்கப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு தப்பிச் சென்றவர், திருகோணமலையின் வள்ளிமலரைச் சேர்ந்த, 41 வயதான எல்சியாம் நசீம் என அழைக்கப்படும் மொஹமட் காசிம் மொஹமட் நசீம் என்பவராவார்.

இவர் கந்தக்காடு போதைப் பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தார். அங்கு இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதன் காரணமாக, முல்லேரியா தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், இன்று அதிகாலை அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இதேவேளை, குறித்த நபரைக் கண்டுபிடிக்க உதவிய, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிக்குழாம், ஊடகங்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும், பதில் பொலிஸ்மா அதிபர் தனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# அம்பாறை தமிழர் இழந்தவற்றை மீட்டெடுத்து கொடுப்பதே இலக்கு

## காலத்தின் தேவை என்கிறார் கருணா



கொழும்பு, ஜூலை 24

அம்பாறை மாவட்ட தமிழர்கள் இழந்தவைகள் ஏராளம். இனி இழப்பதற்கு ஏதுமில்லை. அவைகளை மீட்டெடுக்க ஒன்று சேர வேண்டும். இது காலத்தின் தேவை.

– இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் இளைஞர் அணியினரின் கலந்துரையாடல் அவரது கல்முனை தேர்தல் பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்திலேயே, தான் இங்கு வெளிப்படுத்தும் தரவுகளையும், புள்ளிவிவரங்களையும் இங்கு சமுகம் தந்திருக்கும் இளைஞர்கள் அம்பாறை மாவட்டத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச்சென்று அங்கிருக்கின்ற தமிழ் மக்களின் மனதில் பதிவேற்றம் செய்ய வெண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

இற்றைவரை தமிழர்களுக்கு எதிரான அரசியல் செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் எமது தலைவர்கள் நகர்த்தி வந்தார்கள். அவைகளுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய திராணி நிறைந்த தமிழ் அரசியல்வாதிகளை நாம் இற்றைவரை தெரிவு செய்திருக்கவில்லை என்பதை அனைவரும் மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும்

இற்றைவரை அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 46 பூர்வீக தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால் எழுதப்பட்ட 'அழிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள்' என்ற நூலில் ஆதாரங்களோடு குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நல்ல உதாரணம் கரவாகு, திராய்க் கேணி கிரமங்களாகும்.

இது மாத்திரமா? இறுதியாக கல்முனைப் பகுதி தமிழ் மக்களின் பிரதேச செயலகத்தின் அந்தஸ்திற்கு முட்டுக்கட்டை போட்டார்கள்.

ஆதலால் நாம் இவைகளுக்கு ஒரு தடைவேலியை முதலில் போட்டு நாம் இழந்தவைகளை மீட்டெடுக்க வேண்டும். இனி நாட்டை ஆளப்போவது ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி. எனது அரசியல் குரு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. எனக்கு அதிகாரத்தை தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தரவேண்டும். நான் மஹிந்தவுடன் பயணிப்பேன். எனது வேகத்துக்கும் விவேகத்துக்கும் யாரும் ஈடுகொடுக்க முடியாது. இழந்தவைகள் மீட்டெடுக்கப்படும். அக்கருத்தில் மாற்றமில்லை – என்றார்.

# குருபரன் மீதான நடவடிக்கை வெட்கப்பட வேண்டிய ஒன்று!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் சாட்டை



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் சட்டத்துறை தலைவரும் முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி குமார வடிவேல் குருபரன் மீதான நடவடிக்கை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் மனங்களிலும் கடும் வேதனையை உண்டாக்கியுள்ளது. பல்கலைக் கழகச் சமூகத்தை எண்ணி வெட்கித் தலைகுனியும்படியாக வைத்துள்ளது.

– இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுபவருமானஈஸ்வரபாதம்சரவணபவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுபெரும் சொத்தாக கலாநிதி குமார வடிவேல் குருபரன் காணப்படுகின்றார். ஆனால், இன்று அவரின் அருமையை, மாணவ சமூகத்துக்கு அவர் தேவைப்படுவதன் முக்கியத்துவத்தை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவை உணரத் தவறியுள்ளது. அல்லது உணர்ந்தும் உணராமல் உள்ளது.

பல்கலைக்கழகம் என்பது ஒரு சுயாதீன நிறுவனம். எவ்வித அழுத்தங்கள் மற்றும் தலையீடுகள் இல்லாமல்தான் அதன் செயற்பாடு அமைய வேண்டும். இவ்வாறிருக்கையில் குருபரன் மீதான நடவடிக்கையை பல்கலையின் புலமை சார்ந்த சுயாதீனம் பறிக்கப்பட்ட நிலையாகவே கருதவேண்டியுள்ளது.

பேரவையானது பல்கலைக்கழக மானிய ஆணையம் எடுத்த முடிவை எந்த விதமான மீளாய்வும் இன்றி ஏற்றுக் கொண்டதாகவே தோன்றுகிறது. இதன் மூலம் இலங்கையில் சுயாதீன உயர் கல்வி நிறுவனத்தின் கட்டமைப்பின் தன்மையை இழக்கும் நிலையை நோக்கி நகர்கிறது.

2011ஆம் ஆண்டு முதல் ஒரு மூத்த விரிவுரையாளர் பதவியையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையின் தலைமையையும் கொண்டிருந்தமை நாட்டில் மனித உரிமைகளை உயர்த்துவதில் அவருக்கு பலமாக இருந்தது. அவர் சட்டத்துறையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்க துறைசார் நடைமுறைகள் ஏற்கனவே இருக்கின்றன. பேரவையானது பல்கலைக்கழக விவகாரங்களில் உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ எவரும் அல்லது எந்தவொரு அதிகாரமும் தலையிட அனுமதிக்க கூடாது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முடிவுக்கு எதிராக போராட பேரவைக்கு அதிகாரம் இருக்கிறது. போராடியிருக்க வேண்டும் – என்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் குருபரன், விரிவுரையாளராகச் செயற்பட்ட அதேநேரம் பல பொதுநல வழக்குகளிலும், மனித உரிமை சார் வழக்குகளிலும் முன்னிலையாகிவந்தார். அப்படி அவர் கையில் எடுத்த வழக்குகளில் ஒன்றுதான் நாவற்குழியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு. இதன் பின்னர் விரிவுரையாளராக கடமையாற்றுதல் அல்லது சட்டத்தரணியாக மன்றில் முன்னிலையாகுதல் ஆகிவற்றில் ஒன்றைத்தான் குருபரன் தெரிவுசெய்யலாம் என்று நிர்பந்திக்கப்பட்டது. இதையடுத்து குருபரன் அண்மையில் சட்டத்துறைத் தலைவர் பதவியில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரப் பாதுகாப்புடன் நாடாளுமன்ற அமர்வுகள்

## ஆராய்வதற்கு விசேட குழு விஜயம்

பொதுத்தேர்தலின் பின்னர் கொரோனா வைரஸ் சவாலுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்புடன் நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சுகாதார வழிகாட்டல் தொகுப்பொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆராய்வதற்கு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழு நாடாளுமன்றத்துக்கு நேற்று விஜயம் செய்துள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் ஆரம்பிக்கவிருக்கும் நாடாளுமன்றத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் பிரபுக்கள், நாடாளுமன்ற பணியாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர்களை கொரோனா வைரஸ் சூழலிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கு இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்தொகுதி பிரதானியுமான நீல் இத்தவல உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

இந்த வைத்தியர்கள் குழு நாடாளுமன்ற சபா மண்டபம், உறுப்பினர்களின் முகப்புக் கூடம், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் விசேட விருந்தினர்களுக்கான கலரிகள், உறுப்பினர்களின் உணவுக் கூடம், நூலகம் என்பவற்றை பார்வையிட்டனர்.

இதனைவிடவும் நாடாளுமன்றப் பணியாளர்களின் உணவுக் கூடம், விசேட விருந்தினர்களின் உணவுக் கூடம் உள்ளிட்ட நாடாளுமன்ற வளாகத்திலுள்ள முக்கிய இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்த விஜயத்தின் பின்னர் மருத்துவர் குழுவுக்கும், நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தற்போது நாடாளுமன்றத்தில் கடைப்பிடிக்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காணப்படும் நடைமுறை சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2020 இல் வெளியிடப்பெற்றது.